திராவிடநாடு

காஞ்சி] 8—2—53 [ஞாயிறு

# மேட்டுப்பாளையம் வாரீர்!

★

வானத்தில் வட்டமிடும் விமானத்தை வீழ்த்த, வாயால் ஊதி ஊதிக் களைத்து வீழும், பேதமை முயற்சியிலீடுபடும் 'தொகை'யினர், இருந்த காலம் ஒன்று உண்டு! அந்தக் காலம் இன்று அந்தி நேரமாகி வருவதோடு, அத்தகைய முயற்சியில் நேரத்தையும் நினைப்பையும் செலவழித்தோர் 'தொகை'யும் குறைந்து வருகிறது. "வட்டமிடுவது விமானமல்ல! பலூன்!!" என்று மக்களிடம் கூறிக் கூறித் திருப்தி அடைவதில், சிந்தனையை ஓட்டிய அந்தக் கூட்டம், ஒரு முக்கிய விஷயத்தை இன்று உணர்ந்து வருகிறது. 'பலூன்!' என்று வானத்தில் ஓடும் விமானத்தைச் சுட்டிக் காட்டும்போது, தமது பைகளிலிருக்கும் பணத்தைப் 'பலர்' அபேஸ் செய்து விடுகிறார்கள் என்பதுதான்.

உண்மையைப் போலி என்று கூறி, அதனாலேற்படும் ஆனந்தத்தில் திளைக்க முயல்வது, அற்பத்தனமானது மட்டுமல்ல; தம்மையே நாசம் செய்து கொள்வதாகும். இதனால்தான, சமுதாயக்கேடுகளைச் சுட்டிக்காட்டும், நமது இயக்கத்தை 'பலூன்' என்று பரிகசித்தனர் மாற்றார்! 'புகை நிரம்பியது — போகப் போகத் தெரியும்' என்று கேலி பேசினர்!! அவ்விதம் கேலி பேசும் கும்பலில் சேர்ந்தோரின், 'வாழ்வு' பறி போயிற்று—வானத்தை அண்ணாந்து கிடந்தவனின் பணப்பை, களவு போனதுபோல.

பரிகாசம், கண்டனம், இருட்டடிப்பு—இந்த மூன்றும் முக்கியமான அஸ்திரங்களாகும்—ஆதிக்க புரியினருக்கு. இந்த மூன்றினையும், ஏவினர்—ஏவிக் கொண்டுமுள்ளனர். எனினும், 'நாம்' வளர்கிறோம்! நாம் கூறி வரும் கொள்கைகள் வளருகின்றன!! மனித வாழ்வைக் கொள்ளையிடும் சமுதாய அமைப்பைச் சுட்டிக்காட்டியதும், அதனைச் சரிசமமாக்க முயன்று வருவதும், நம்முடைய இயக்கம்தான்.

வாழப் பிறந்த மனிதனை, பணபலம் படைத்தோன் சுரண்டுகிறான் —ஆட்சி அதிகாரம் பெற்றோன் ஆட்டிப் படைக்கிறான் — மதவாதி மீளாகபடுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கிறான்.

இந்த மூன்று பிடிகளையும் விடுவித்துக் கொண்டு — மனிதன், நிமிர்ந்து நிற்க வேண்டும்.

இந்த மூன்று பிடிகளும் சரணடையும் இடமாகவும், அணைத்து ஆதரவளிக்கச் செய்யும் பீடமாகவும், இருந்து வந்தது அரசாங்கமாகும். கடந்த நூற்றாண்டுகளில், அரசாங்கங்களின் அதிபர்களாயிருந்த, மன்னர்களின் அரண்மனைகளிலே, இந்த மூன்றும் தஞ்சம் புகுந்திருந்தன. அரண்மனையிலே, ஆட்சி அதிகாரம் பெற்றவன் உலவுவான்! பணபலம் பெற்றோன், 'பாத பூஜை' செய்வன்! மதகுரு, உல்லாசமாகவலம் வருவான்!

இந்த மூன்றும், மணிமுடி தரித்தோருக்கு, இலாபம் உண்டு. எனவே, அவர்களும் ஒத்து ஊதினார்கள்—மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. இதனால், மக்களின் வாழ்வில் வேதனை வளர்ந்தது! வேதனை அதிகமாகியபோது, மணிமுடியின் பக்கம், மக்கள், கவனம் செலுத்தினர். வீராவேசம் ஏற்பட்டபோது, 'மணிமுடியால் நாம் வதைகிறோம்!' என்று செங்கோலேந்தியவன் மீது, சீறினர்—பாய்ந்தனர். இதன் விளைவாக, உலகச் சரிதத்தில், அப்போதைக்கப்போது பற்பல மன்னாதி மன்னர்கள் முடியிழந்ததையும் தூக்குமேடையில் நிறுக்கப்பட்டிருப்பதையும் காணுகிறோம், நாம்!

வாழ்வில் சுகமில்லை என்றதும் சிம்மாதனம் நோக்கி, மக்கள் சிந்தை செல்லும்—இது, முன்பு.

ஆனால் இப்போது, சிம்மாசனம் நோக்கிச் சிந்தனையைச் செலுத்த முடியாது.

காரணம், இப்போது, சிம்மாசனங்கள் அல்ல, நாட்டை ஆள்வது! ஜனநாயகம் பேசிடும் அரசியல் வாதிகள்!! மக்களின் தூதர்கள்!!!

இந்த அரசியல்வாதிகளை அகற்றுவதென்பது, மன்னனை விரட்டியோட்டியதைப் போன்று இலகுவான காரியமல்ல. அவன் மன்னன்! இவர்களோ மக்களின் தலைவர்கள்!!

'வார்த்தைகள்' மட்டும் மாறினவேயன்றி, மன்னர்கள் காலத்தில் எவ்விதம் மனிதன் 'மூன்று பிடிகளுக்குள்' அகப்பட்டு வாடினானோ அவைகள் இன்றும் இருக்கின்றன. பணம் படைத்தவன்பிடி! மதவாதியின் கழுகுப்பிடி! அரசியல் லாப வேட்டைக்காரர்களின் சாகசப்பிடி!

இந்தக் கேட்டினை, அன்றுமுதல் எடுத்துக்கூறிவருவது, நமது அறிவியக்கமாகும். மன்னர்களாட்சியில் தமக்குப் பாதுகாப்புத் தேடிக்கொண்ட 'வல்லூறுகள்' 'மக்களாட்சியிலும்' தமக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளத் தவறவில்லை.

மதசுதந்திரம்! தனிமனிதன் சுதந்திரம்!!—இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் மதிப்பு கொடுத்து, மக்களாட்சியில், 'அவர்கள்' உலவ உரிமை கொண்டாடுகின்றனர் தனி மனிதன், தனக்குப் பிடித்தமான ஒரு மதத்தைத் தழுவிக்கொண்டு, உள்ளத்திலோ அல்லது வீட்டுக்குள்ளோ இருப்பதைக் குறித்து, எவருக்கும் தொல்லையில்லை. எட்டிக்காயைத் தின்றுவிட்டு கட்டிலில் கிடந்து காலையுதைத்துக்கொள்வது சொந்தவிஷயம்! ஆனால், எட்டிக்காயைத் கானும் தின்றுக்கொண்டு, வீதியில் நின்று கூத்தாடி பிறருக்குத் தொல்லை தருவது, சாதாரண விஷயமல்ல!! "மதம் — ஒருவருடைய தனி பழக்க வழக்க முறை" என்பது வேறு. "இவர் இந்த மதம் ஆகவே இப்படி இப்படித்தான் வாழவேண்டும். இறந்தால் புரோகிதம் வைக்கவேண்டும்" என்று வலியுறுத்துவது வேறு. வீட்டுக்குள், 'சிவா! விஷ்ணு!!' என்று செப்பிக்கொண்டிருக்கும் ஒருவனால், எவருக்கும்நஷ்டமில்லை. அதேபோலத் தன் கொல்லையில் தானே தோட்டம் வைத்து நீர் பாய்ச்சி, உழைத்துப் பழம் கண்டதும் பறித்துத் தின்பவனைப்பற்றியும் பிறருக்குக் கஷ்டமில்லை. தன் 'மதத்தைப்' பிறருக்குச் சுமத்தி அதன்படி நடக்கவேண்டுமென வலியுறுத்துவதும்; தன்தோட்டத்தில், பிறர் வேலை செய்யவேண்டும் — பழம் பழுத்ததும் தான் பறித்து உண்ணவேண்டும் என்கிற மனோபாவம் நீடிப்பதும், தனிப்பட்டோரின் சொந்த விஷயமல்ல; அவை ஓர் சமுதாயத்தைப் பாதிக்கக்கூடியவைகளாகும்.

இதனால்தான், சமுதாயத்தைப் பாதித்து சாக்கடையாக்கும், மதவாதம், பணத்திமிர் இரண்டினையும் எதிர்க்கும் கடுமையான வேலையில் அறிவியக்கம் ஈடுபட்டு வருகிறது. "அம்பலத்தரசே போற்றி! அருமருந்தே போற்றி!!" என்று கூட்டத்தோடு கோவிந்தா போடுவதும், அதனால்வரும் லாபத்தை அடைவதும், சுலபமான காரியமாகும். அதைபோல முதலாளிகளின் மோகனப்புன்னகைக்குத் தலைவணங்கி, காலத்தைக் கழிக்கவும் இயலும்! — ஆனால், அந்த வாழ்வை விலக்கி, தேள் கொட்டினாலும் திகைக்காமல் நடக்கும் சீர்திருத்தப் பாதையில் நாம் நடந்து செல்லும் காரணம், சமுதாயக் கேடுகளைப் போக்கி, மனித சமுதாயம் மாண்போடு வாழ வேண்டுமெனும் ஆசைதான்.

மனித உரிமைகளைப் பறிக்கும், பணம்—மதம்—அரசு — ஆதிக்கங்களை எதிர்த்துப் பல நாடுகளிலும், பற்பல வழிகளில், பலர் முயன்றிருக்கின்றனர். முதலிரண்டு ஆதிக்கங்களும், தமக்கு ஆபத்து வருவது போலத் தோன்றினால், அரசாதிக்கத்திடம், ஓடும்! அரசுபீடமும், தம்மை அண்டிவந்த 'ஆடுகள்' போல் அணைத்துக்கொள்ளும்!! இந்த வழக்கம் அரசர்கள் காலத்திலிருந்தால், அரசனை நோக்கிக் கொதித்தெழுந்த மக்கள், சிறமுடியும். ஆனால், ஜனநாயகம் பேசிடும் மக்களின் தூதர்களின் காலத்தில் என்ன செய்வது?

இன்றைய உலகில், இந்த ஆதிபத்யங்களுக்கு, 'ஜனநாயகம்' என்கிற அழகான உறை கிடைத்திருக்கிறது.

இந்த 'உறைக்குள்' ஆதிக்கபுரியினர் புகுந்துகொள்வதால், தத்தமது சுயநல லாப வேட்டைகளை வளர்த்துக்கொள்ள முடிகிறது, அகில உலக நாடுகளில் ரஷ்யா போன்ற சில நாடுகளைத் தவிர்த்து. ஏனையவை இந்த 'ஜனநாயகம்' எனும் சொல்லைத் தத்தமது பணாதிபத்யத்துக்கான பாதுகாப்புக் கோட்டையாகவே கருதி வருகின்றனர். இங்கிலாந்து—ஜனநாயக யுகத்தின் ஒளிவிளக்கு என்று போற்றப்படுகிறது! ஆனால், அங்கும் ஏழை—பணக்காரன் பேதம் உண்டு. அமெரிக்கா, ஜனநாயகத்தைத் தழைக்கச் செய்யும் விதம் குறித்து விளக்கங்கள் ஏராளம் பெறுகிறோம் — ட்ரூமன் போனார், ஐசன்ஹோவர் வந்தார் என்றெல்லாம். ஆனால், ஐசன் வந்ததும் பழைய பாதையில்தான் செல்லுகிறார்! தவிக்கும் ஏழையின் கண்ணீரைவிட, முதலாளித்துவப் பாதையிலேயே நடக்கிறார். இவ்விதம் ஜனநாயகம் குறித்து முரசு கொட்டும் உலக நாடுகளில் எல்லாம் —அது ஓர் வர்ணப்பூச்சி என்ற அளவிலேயே மதிக்கப்படுகிறது. ஓட்டு—தேர்தல் — வெற்றி—அரசு அமைப்பு என்கிற இவ்வித முறைகள் யாவும் உண்டு. ஆனால், மனிதனோ, தனக்கு வேண்டிய உரிமைகளையும் சுகங்களையும் பெற முடிவதில்லை.

காரணம் 'மக்களின் தலைவர்கள்' என்ற போர்வையில் அரசதிகாரம் மாறியிருப்பதுதான். இந்த மாற்றத்தை ஒழித்து, மனிதன் மனிதனாக வாழ வழி வகுக்கும் பற்பல முயற்சிகளை, அந்தந்த நாட்டினர் செய்து வருகிறார்கள்.

அவர்களுக்கு முக்கியமான பணி, பணாதிபத்தியத்தையும் அதை வளர்க்கும் அரசாதிகாரத்தையும் ஒழிப்பது!

ஆனால் நமக்கோ, அந்த இரு ஆதிக்கங்களோடு, மற்றோர் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுவதாகும்! அதுதான், மதஆதிக்கம்!!

மேலைய நாடுகளில் உள்ள மதங்களுக்கும், அது வளர்க்கும் மூடநம்பிக்கைக்கும் — நமது மதத்துக்கும் அது வகுத்திருக்கும் கேடுகளுக்குமிடையே தாரதம்யம் உண்டு.

அங்கே கிருஸ்துவ மதம்! அல்லது இஸ்லாம்!!

இங்கோ, இந்து மதம்! முப்பத்து முக்கோடி தேவர்கள்!!

ஒற்றுமை ஓரிடத்தில்! வேற்றுமை மற்றோரிடத்தில்!!

இதனாற்றான், அறிவியக்கத்தாராகிய நாம், சமுதாய சீர்திருத்தப் பணியில் மிகமிக அக்கரை கொண்டவர்களாகயிருக்கிறோம். சமுதாயத்தின் மேடுபள்ளங்களையும, அது வளர்ந்தவகையையும், அதனால்வினையும் தீமைகளையும் விளக்கி, பணி புரிந்து வருகிறோம். இந்தப் பணியோடு, சமுதாய மேடுபள்ளங்களை வளர்க்கும் வகையில் ஒத்துழைக்கும் அரசு அமைப்பையும் எதிர்த்துப் போராடி வருகிறோம்.

இந்த அரும்பணியை 'பலூன்' என்று தூற்றியோர், இன்று அஞ்சுமளவுக்கு முற்போக்குக் கொள்கைகள் வளர்ந்திருக்கின்றன.

இந்த வளர்ச்சியைப் பற்றி எண்ணும் நேரத்தில், எதிரியின் வீழ்ச்சியும் தென்படாமலில்லை.

ரஷ்யாவில் ஜார் மன்னன் ஒழிந்தான்! மக்கள், புது அரசு அமைத்தனர்!!

இங்கேயிருப்பது மன்னர்களல்ல மக்களின் தூதர்கள்—ஜனநாயகம் பேசிகள்!!

ஜனநாயகம் பேசியவாறே, நம்மைச் சுரண்டும் ஆதிக்கங்களை எதிர்த்துப் போராடி வருகிறோம் மத ஆதிக்கம் — பணாதிக்கம் — அரசாதிக்கம். முற்போக்குக் கொள்கைகளின் வளர்ச்சியைக் கண்ட மத ஆதிக்கமும், பணாதிக்கமும்; இன்று தத்தமது பாதைகளை மாற்றிக் கொள்ளத் துடிக்கின்றன! நேற்று வரை திரை மறைவில், அந்த ஆதிக்கங்களோடு கூடிக் குலவிய, அரசு ஆதிக்கம், இன்று பகிரங்கமாகவே பவனி வருகிறது! மக்களிடைவளர்ந்திருக்கும் மூடநம்பிக்கை இருளும் அடிமை மனப்பான்மையும் ஒழிவது, தனக்கு ஆபத்தென்று ராஜ கட்டிலேறிய பேர்வழி ஜனநாயகவாதிகள் உணர்ந்து கொண்டார்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

## சேலம்-கோவை

★ நாடகமூலம் ★

## ரூ. 4756

[புயல் நிவாரண நிதிக்கு]

| | | |
|---|---|---|
| முன் கணக்குப்படி | ரூ. | 14146-14-11 |
| தோழர் ஆர். டி. அரசுமூலம் | | 625—0—0 |
| சென்னை 'விலைமகள்' நாடகத்தின் நன்கொடை | | 51-12—0 |
| சேலம் கோவை நாடகமூலம் | | 4756—0—0 |
| ஆக மொத்தம் | | 19579-10-11 |

# நெருப்பே! உன் மகிமை மிகப் பெரிது!

[ அடிகள் ]

'நெருப்பினுள்ளே புகுந்த நந்தனார் அந்த உடம்பை ஒழித்துப், புண்ணிய மயமாகிய பார்ப்பன வடிவங்கொண்டு பூணூலோடுஞ் சடைமுடியோடும் எழுந்தார்''

நந்தனார் என்னும் புலையன் ஒருவன், ஆதனூர் என்னும் ஊரில் பிறந்திருந்தான் என்றும்; அவன் அவ்வூரிலுள்ள ஒரு ஐயருடைய வயலுக்குப் பண்ணையாளாய் அமர்ந்து வேலை பார்த்து வந்தான் என்றும்; அவன் கடவுளிடத்து அன்புடையவனாய் இருந்ததால், பல கோயில்களுக்குஞ் சென்று ஆங்காங்குள்ள கடவுளரைக் கண்டு வணங்கவேண்டுமென்ற விருப்பம் மிகுதியுமுடையவனாய் இருந்தான் என்றும், அங்ஙனஞ் செய்வதற்கு ஐயரின் பண்ணை வேலை தடையாய் இருந்ததால், 'நாளைக்குப் போவேன்' 'நாளைக்குப் போவேன்' என்று சொல்லிக்கொண்டு இருந்ததைக் கண்ட அவ்வூரார் அவனைத் "திருநாளைப்போவார்" என அழைத்தனர் என்றும்; வர வர நந்தனாருக்குக் கடவுளிடத்தில் அன்பு பெருகிக்கொண்டு வந்ததால், எப்படியாவது சிதம்பரஞ் சென்று கடவுளைக் காணவேண்டுமென்று முடிவு செய்தவராய் ஐயரிடம் முறையிட்டுக்கொண்டார் என்றும்; அதற்கு அந்த ஐயர், 'நமது பண்ணை வேலைகள் எல்லாவற்றையும் முடித்துத் தந்துவிட்டுப் போ' என்று சொன்னதாகவும்; அதுகேட்ட திருநாளைப் போவார் பெரிதும் வருந்தி, 'எப்போ நாற்றிடுவது! எப்போ நாற்று நடுவது! எப்போ அது விளைந்து அறுவடையாவது! எந்தக் காலம் நான் தில்லைக்குப் போய்க் கடவுளைக்காண்பது!' என்றெல்லாம் எண்ணியவராய்க் கடவுளை இடைவிடாது நினைந்துகொண்டு இருந்தார் என்றும்; அது கண்ட அருட்பெருங் கடவுள் ஐயரின் வயல்கள் எல்லாம் என்றுமில்லாத விளைச்சலோடு அறுவடைக்குரியதாக ஆகும்படி ஒரு விநாடியிற் செய்தார் என்றும்; அவ்வியத்தகு செயலைக் கண்ட ஐயர் திருநாளைப்போவாரை வணங்கி விடைகொடுத்தார் என்றும்; அங்ஙனம் விடைபெற்றுச் சிதம்பரத்தை அடைந்த நந்தனார் தம்முடைய இழிபிறப்புக் கோயிலுட் செல்லத் தடை செய்கிறதே என்று வருந்தியதாகவும்; நடராசர் அவருக்குக் கனவிலே தோன்றி, 'நீ இந்த இழிபிறப்பு நீங்கும்படி நெருப்பிலே மூழ்கி எழுந்து, பார்ப்பனர்களோடும் நம்முடைய கோயிலுக்கு வருவாய்' என்று அருளிச்செய்து தில்லைவாழ் பார்ப்பனர் கனவிலுந் தோன்றித் திருநாளைப்போவார் பொருட்டு நெருப்பு வளர்க்கும்படி கட்டளையிட்டார் என்றும்; அங்ஙனம் வளர்க்கப்பட்ட நெருப்பில் நந்தனார் மூழ்கிப் பார்ப்பன வடிவில் தோன்றி வெளிப்பட்டுக் கோயிலுட் சென்று, கடவுளைக் காண்பதாகிய பெரும்பேற்றை அடைந்து, கடவுளுடன் இரண்டறக் கலந்துவிட்டார் என்றும் கூறப்படும் ஒரு கதை நம் நாட்டில் உண்டல்லவா! அதன் முழு உண்மை என்ன?

நந்தனாருடைய அன்புக்கு அடிமையான கடவுள், ஐயருடைய வயல்கள் எல்லாம் ஒரு விநாடியில் விளைந்து அறுவடைக்குரியதாகும்படி செய்தார் என்று கூறப்படுவதை முதலில் ஆராய்வோம். இது உலக இயற்கை நிகழ்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாத ஒரு பெரும் புளுகாகவே இருக்கிறது. எப்படியென்றால், உலகிற் காணப்படும் நிகழ்ச்சிகளில், கடவுளின் திருவருளால் நிகழ்வது ஒருவகையெனவும், மக்களின் முயற்சியால் உண்டாவது இன்னொரு வகையெனவும் பிரித்துக் காண்பித்து, மக்களிடையே கடவுள் நம்பிக்கையை உண்டாக்கி அதனால் தங்கள் பிழைப்புக்கு வழிதேடிக்கொள்வது மதநூலார் கொள்கையாகும். எடுத்துக்காட்டாக, நெல் விளைவதற்கு வேண்டிய மழை இல்லாமல் இருந்து திடீரென மழை பெய்து நெல் விளைந்தால், அதனைக் கடவுள் திருவருள் என்றும், கிணற்றிலிருந்தோ ஆற்றிலிருந்தோ நீர் பாய்ச்சப் பெற்று நெல் விளைந்தால் அதனை மக்களின் முயற்சி என்றும் கூறுவது வழக்கம். ஆனால், மக்களின் முயற்சியும் இயற்கை அமைப்புமே எல்லாவற்றிற்கும் காரணம் என்பது அறிவு நூலார் கொள்கையாகும். 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழியும் அறிவு நூலார் கொள்கையையே வலியுறுத்துகின்றது. உயிர்களின் பிறப்பு முறையைப்பற்றிக் கூறும்போது கூட, 'அறுகு நுனி பனி அனைய சிறிய துளி பெருகினு'லன்றி உயிர்கள் உண்டாகாதென்பதே தமிழர்கண்ட உண்மையாகும். ஆனால், நந்தனார் கதையில் வெறும் நிலத்தில் நெல் தானாகவே முளைத்து வளர்ந்து விளைந்ததென்றும், அங்ஙனம் விளைந்ததும், நந்தனார் கடவுளிடத்து வைத்துள்ள அன்பினாலே என்றுஞ் சொல்லப்படுகிறது. ஆனால், நந்தனார், கதையைப் படக்காட்சியில் (சினிமாவில்) அமைத்துக் காண்பிப்பவர்கூட, ஒரு விநாடியில் நெல் முளைத்துப் பயிராகி விளையுங் காட்சியை அப்படியே காண்பிக்கிறார்கள். இதுவும் அந்தக் கடவுளின் திருவருளால்தான் நிகழ்கின்றதென நாம் நம்புவதா? அல்லது மேல் நாட்டவரின் அறிவும் முயற்சியும் பயன்படுத்தப்பட்டு, அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பொறி (இயந்திரங்)களின் உதவியால் இத்தகைய வியத்தகு காட்சிகள் நிகழ்கின்றன என்று முடிவு செய்வதா?

இனிப், படக்காட்சிகளை அமைப்பவர்கள், வயல்களில் நாற்று நடும் இடங்களுக்குச் சென்று, அக்காட்சியை ஒரு தனிப்படமாகவும், நெல் விளைந்து அறுவடைக்குரியதாய் இருக்கும் காட்சியை ஒரு தனிப்படமாகவும் பிடித்து, அவற்றையெல்லாம் வரிசையின்படி ஒன்றாக இணைத்து, அவர்கள் கண்டுபிடித்துள்ள வியத்தகு பொறிகளின் உதவியால் அக்காட்சிகள், ஒரே இடத்தில் ஒரே விநாடியில் நிகழ்கின்றன என்று பார்ப்பவர்கள் எண்ணிப் புதுமைப்படக் கூடியதாகக் காண்பிக்கிறார்கள். எனவே, நந்தனாருடைய அன்புக்குக் கட்டுப்பட்ட கடவுள், தம்முடைய திருவருள் ஆற்றல்கொண்டு ஒரு விநாடியில் நெல்விளையும்படி செய்தார் என்று சொல்லப்படுவது எத்துணை உண்மை என்பதைப் பகுத்தறிவுடைய தமிழ்மக்கள் தங்கள் ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்த்து முடிவு செய்வார்களாக.

இனி, நந்தனார் நெருப்பிற் குளித்துக் கடவுளுடன் இரண்டறக்கலந்ததாகச் சொல்லப்படும் பகுதியையும் ஒரு சிறிது ஆராய்வாம். அதாவது, நந்தனாரைக் கோயிலுட் சேர்த்து அவரைத் தம்முடைய திருவடியில் வைத்துக்கொள்வதற்காகக் கடவுள் தில்லைவாழ் பார்ப்பனரைக்கொண்டு நெருப்பை வளர்ப்பித்தார் என்று சொல்லப்படுகிறது. இதுவும், ஒரு பகுத்தறிவுக்குப் பொருந்தாத நிகழ்ச்சி என்பது ஒருபுறமிருக்க, மதநூலார் கூறும் கடவுள் இலக்கணத்திற்கும் எவ்வளவோ மாறுபாடாய் இருக்கிறது. எப்படியென்றால், சிற்றறிவுடைய மக்களைப்போலப், பேரறிவும் பேராற்றலும் வாய்ந்த கடவுள், தாம் ஒன்றைச் செய்துகொள்ளும் பொருட்டு, அதற்குக் கருவியாக வேறு பல உதவிப் பொருள்களையும் ஆட்களையும் வேண்டுபவர் அல்லர். அங்ஙனம் வேண்டுபவராய் இருந்தால் அவரை எல்லாம்வல்ல கடவுள் என்ற நிலையில் வைத்து அழைப்பது யாங்ஙனம் பொருந்தும்? கடவுள், தாம் நினைத்த உடனேயே எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும், எவ்வித துணையும்வேண்டாது, அந்தந்த வடிவிலும் குணத்திலும் படைக்கவல்ல ஆற்றல் உள்ளவர். அதற்காக அவர் எவ்வித உதவிகளையும் வேண்டார் என்பனபோன்ற கடவுள் இலக்கணங்கள் மதநூலாரால் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. எனவே, நந்தனாரைத்தூய்மை செய்யும் பொருட்டுப் பார்ப்பனர்களைக்கொண்டு நெருப்பை வளர்ப்பித்து, அதில் அவரை மூழ்கச்செய்தார் கடவுள், என்பது மதநூலார் கொள்கையின்படியும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு பொருந்தா உரையாம். ஏனெனில், நந்தனாருடைய அன்புக்கு மகிழ்ந்த கடவுள், அவரால் பயிர்த் தொழில் செய்யப்பட்டுவந்த ஒருபார்ப்பனருடைய வயல்களெல்லாம் ஒரு விநாடியிலே முளைத்துப் பயிராகி—வளர்ந்து—விளைந்து—அறுவடைக்கு உரியதாமாறு தோன்றும்படி எவருடைய உதவியுமின்றித் தாமே செய்ததாகக் கூறுவதை ஒப்புக்கொள்ளுஞ் சைவ அன்பர்கள், அக்கடவுள், நந்தனாரையும் அவர் வடிவின் வேறாக்கிக், காண்பவர்கள் எல்லாம் வியக்கத்தக்க ஒரு அழகிய அருள் வடிவத்துடன் தோன்றும்படி தாமே செய்து, அவரைத் தமது கோயிலுட் சேர்த்துக்கொள்ளலாகாதா என்பதனையும், அங்ஙனஞ் செய்தால் அது கடவுள் இலக்கணத்திற்கு மாறாய் முடியுமா என்பதனையும் எண்ணிப் பார்த்தல் வேண்டுமன்றோ!

அன்றியும், நெருப்பை வளர்த்து நந்தனாரை அதில் மூழ்கச் செய்து கோயிலுட் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று தில்லைப்பார்ப்பனர் கனவில் தோன்றிச் சொன்ன கடவுள் 'நாளை நந்தன் வருவான், அவனைக் கோயிலுட் செல்லவிடுங்கள்' என்று சொன்னால், அதனை அப்பார்ப்பனர் ஒப்புக்கொள்ளமாட்டார்களா? அல்லது நந்தனாரைப்போலவே 'பறையன்' என்று கருதப்பட்ட பெத்தான் சாம்பான் என்பானுக்குத் தீக்கைப் பேறளித்து முத்திகொடுக்கும்படி கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் என்பவருக்கு,

"அடியார்க்கெளியன்
சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க்கெழுதிய
கைச்சீட்டுப்—படியின்மிசை
பெத்தான் சாம்பானுக்குப்
பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை"

என்ற ஒரு வெண்பாவைக் கடவுள் ஒரு சீட்டில் எழுதியனுப்பியதாகவும், அச்சீட்டைப் பெற்றுக்கொண்ட உமாபதிசிவம் உடனே பெத்தான் சாம்பனுக்குக் களங்கமற்ற தூய்மை (தீக்கை)ப் பேறளித்து, அவரைப் பிறவாப் பெருவாழ்விற் சேர்த்ததாகவும் புராணங்களிற் காணப்படுகின்றதே! இங்ஙனம் பெத்தான் சாம்பானைப் போலவே பிறப்பிலும் அன்பிலும் வேறுபடாத நந்தனாருக்கும், ஓர் ஆசாரியனைக்கொண்டு தூய்மை செய்வித்தால், அது கடவுள் இலக்கணத்திற்கு மாறாய் முடியுமா? அருட்கண்கொண்டு நோக்கும் அன்னலாஞ் சிவனுக்கு, ஒருகுலத்தவரான பெத்தான் சாம்பான் உயர்ந்தவனாகவும், நந்தனார் இழிந்தவனாகவும் புலப்பட்டது ஏனோ? ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்க விழைவார்க்கு இவை சரியெனத் தோன்றும்போலும்!

இனி, நந்தனாரை நெருப்பிலிட்டுத் தூய்மை செய்ததாகச் சொல்லப்படுவது எத்துணைப் பெரும் புளுகாய் இருக்கிறது பாருங்கள். நெருப்பை அறிந்து தொட்டாலும் அறியாமல் தொட்டாலும், அது சுட்டுப் புண்படுத்துமேயன்றிப், புனிதப் படுத்தாது. நெருப்புக்குச் சுடுந்தொழிலும், நீருக்குக் குளிர்ந்ததுஞ் செய்யுங்குணமும், காற்றுக்கு அசையும் இயல்பும் இயற்கையாகவே உள்ளனவென்பது மறக்கமுடியாத உண்மையாகக் காணக்கிடக்கும்போது, நெருப்பில் தள்ளப்பட்ட நந்தனார் தப்பிப் பிழைத்தார் என்பது சிறிதும் பகுத்தறிவுக்குப் பொருந்தா உரையாம். அன்றியும், பொன் வெள்ளி முதலான உலோகங்களை நெருப்பிற் புடம் போட்டு மாற்று உயரச் செய்தல் போலச், சதை எலும்பு நரம்புகளோடு கூடிய மக்கள் உடம்பையும் நெருப்பிலிட்டு மாற்று உயர்ந்தவர்களாக, அதாவது பறையனைப் பார்ப்பானாகச்செய்தார்கள் என்பது சிறு பிள்ளைகளும் எள்ளி நகையாடக்கூடிய ஒரு வேடிக்கையாகவே இருக்கிறது.

எனவே, நந்தனார் நெருப்பில் மூழ்கித் தூய்மை செய்யப்பட்டார் என்பதன் உண்மை யாதெனில், நந்தனார், தீண்டப்படாதவர் என்று சொல்லப்படும் பறையர் குலத்திற் பிறந்திருந்த போதிலும், அவருக்கு ஓரளவு தன் மதிப்பும் பகுத்தறிவும் இருந்ததால், அவர் கோயிலுக்குள் நுழைய முயன்றார். அதோடு கல்லிலுஞ் செம்பிலுங் கடவுள் இருக்கிறார் என்று ஆரியர்கள் தங்கள் வேதங்களில் எழுதி வைத்திருப்பதையும் அவர் மெய்யென நம்பி இருந்தார். எனவே அந்த நம்பிக்கையானது அவரைக் கோயிலுக்குள் நுழையுமாறு தூண்டிற்று. அது கண்ட தில்லை வாழந்தணர்கள், நந்தனாரை நோக்கி, 'நந்தனாரே, உம்முடைய உள்ளக் கருத்தைக் கடவுள் சொல்ல நாம் அறிந்தோம். நாளைக்கு உம்முடைய எண்ணம் நிறைவேறும். உம்பொருட்டு நெருப்பு வளர்க்கும்படி கடவுள் கட்டளையிட்டுள்ளார். நாளைக்கு நீர் இக்கோயிலின் தெற்குக் கோபுரத்துக்கு வாரும்' என்று சொன்னார்கள். அதன்படியே மறுநாட்காலையில் தெற்குக் கோபுரத்தின் முன் ஒரு பெருங் குழி வெட்டி, அதிற் கட்டைகளை நிறையப் போட்டு நெருப்பை உண்டாக்கி, நந்தனாரை அந்நெருப்பின் முன்னால் இருக்கும்படி செய்து, நந்தனாரையும் நெருப்புக்குழியையும் சூழ இருந்துகொண்டு மந்திரங்கள் சொல்லி யாகஞ் செய்வது போற் பாசாங்கு செய்து, நந்தனாரை அந் நெருப்புக் குழியில் விழும்படி செய்து விட்டார்கள் என்பதன்றி வேறு எவ்விதம் இருக்க முடியும்! நெருப்பே! உன் மகிமை மிகப் பெரிது!!

இஃதிங்ஙனமாகச், சிதம்பரம் போன நந்தனார் திரும்பி வாராததைக் கண்ட ஆதனூர்ப் புலையர்கள் சிதம்பரஞ் சென்று, நந்தனார் எங்கே என்று கேட்டதற்கு, அக் கோயிற் பார்ப்பனர்கள், நந்தனார்

---

## காஞ்சியில்

**அழகிரி அறிவு மன்ற 2-ம் ஆண்டு விழா**

நாள்:– 8—2—53 ஞாயிறு

இடம்:– கரிக்கினிலமர்ந்தவள் வீதி

தலைவர்:– கே. செல்வராசன்.

சொற்பொழிவாளர்கள்:–

டி. கே. சீனிவாசன், என். வி. நடராசன்

நடராசப் பெருமானுடன் இரண்டறக் கலந்து விட்டார் என்று பெரியபுராணத்தில் இப்போது காணப்படும் கதையைச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்கள். இனிப் பார்ப்பானாய்ப் பிறந்தால்தான் கடவுளுடைய திருவடியை அடைய முடியுமென்பது சைவம் வைணவம் முதலான இந்துமத நூல்களின் முடிபாகும். இவ்வுண்மை,

> "நெருப்பினுள்ளே புகுந்த நந்தனர் அந்த உடம்பை ஒழித்துப், புண்ணிய மயமாகிய பார்ப்பன வடிவங்கொண்டு பூணூலோடுஞ் சடைமுடியோடும் எழுந்தார்"

என்று பெரியபுராணத்திலேயே சொல்லப்பட்டிருப்பதால் நன்கு வலியுறுகின்றது. இதனால், பார்ப்பனரல்லாதார் எப்படிப்பட்டவர்களாய் இருந்தபோதிலும் அவர்களுக்குக் கடவுட்பேறு கிடையாதென்பது நன்கு உறுதிப்படுத்தப்படுகின்றது. அன்றியும், 'பார்ப்பன வடிவம்' என்று மட்டுஞ் சொல்லாமல் 'புண்ணியமான பார்ப்பன வடிவம்' என்று சொல்லியிருப்பதுகொண்டு, பார்ப்பன வடிவந்தான் புண்ணிய மயம் என்பதும், பார்ப்பனரல்லாதார் வடிவங்கள் எல்லாம் பாவமயம் என்பதும், ஆகவே புண்ணியமற்ற, பாவிகளான சூத்திரர் என்று அழைக்கப்பட்டுந் தமிழ் மக்களுக்கும் ஏனைப் பார்ப்பனரல்லாதார்க்கும் இந்து மதக் கடவுளரின் திருவருளோ அன்றித் திருவடிப்பேறோ கிடையாதென்பதுந் தெற்றெனத் தெரியக் கிடக்கிறதன்றோ! இந்த நிலையில், புராணங்களிலும் வேதாகமங்களிலும் பேசப்படும் சிவன்—திருமால் முதலான கடவுளரைத் தங்கள் கடவுளராக எண்ணி வழிபடுவதும், அதற்காகத் தாங்கள் பாடுபட்டுத் தேடிய பொருள்களைச் செலவு செய்வதும் எத்துணை அறியாமை என்பதை இனிமேலாவது நந் தமிழ்மக்கள் எண்ணிப் பார்த்து, இக்கொடிய இழிவினின்றுந் தம்மை விடுவித்துக்கொள்ள முயல்வார்களாக.

இனி, நாம் மேலே கூறிபடி, நந்தனர் நெருப்பிலிட்டுப் பொசுக்கப்பட்டார் என்ற உண்மையினை இன்னும் ஒரு வலிய சான்றுகொண்டு விளக்கிக் காட்டுவாம். அதாவது, நந்தனர் நெருப்பினுட் புகுந்து பார்ப்பனவடிவத்தோடும் வெளியே வந்தபின், தில்லைவாழ் பார்ப்பனர்களும் மற்றைச் சிவனடியார்களும் கோபுரத்தை அணுகி, அதனை வணங்கி, உள்ளேபோய்க் கனக சபையை அடைந்தார்கள் என்றும், பின்னர் அங்கு நின்ற அனைவரும் நந்தனரைக் காணமையால் 'ஆச்சரியம் கொண்டார்கள்' என்றும் பெரியபுராணத்திற் காணப்படுகின்றது. அங்கு வந்திருந்தவர்கள் நந்தனரை அங்கே காணமல் ஆச்சரியப்பட்டதன் காரணம் என்ன? நந்தனர் கனகசபையை அடைந்தவுடன், கடவுள் அவரை, 'இன்ன விதமாகத் தம்முடைய திருவடியிற் சேர்த்துக் கொண்டார், அவ்வியத்தகு செயலைக் கண்டு எல்லாரும் ஆச்சரியங் கொண்டார்கள்' என்று சொல்லப்படாமல், வறிதே நந்தனரைக் காணமையால் அங்கு நின்றவர்கள் எல்லோரும் ஆச்சரியங் கொண்டார்கள் என்று சொல்லப்படுவதால், முன்னரே நந்தனர் நெருப்புள் தள்ளப்பட்டு வெந்து நீறுனராதலால், அவர் அங்கு வரவில்லை என்பதும், நந்தனர் கடவுளோடு இரண்டறக் கலக்கும் புதுமைக் காட்சியைக் கண்டு களிக்க வந்த மக்கள், நந்தனரை அக்கூட்டத்தில் தேடிப் பார்த்தும் காணப்படாமையினாலேயே ஆச்சரியங் கொண்டார்கள் என்பதும் எவ்வித ஐயுறவுக்கும் இடமின்றித் தெள்ளிதில் அறியக் கிடக்கின்றதன்றோ!

அன்றியும், நந்தனர் நெருப்பினின்றும் வெளியே பார்ப்பன வடிவத்தோடு வந்ததாகச் சொல்லப்படும் பகுதியில், அவர் வரவைக் கண்டு எவரும் ஆச்சரியப்பட்டதாகப் புராணத்திற் காணப்படவில்லை. மற்று, அங்கு நின்ற பார்ப்பனர்கள் களிப்படைந்தார்கள் என்றுதான் புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, களிப்புக்கும் ஆச்சரியத்துக்கும் உள்ள வேறுபாட்டையும், அவ்விரு இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளையும், அந்நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைந்த இரு சொற்களையும், அவ்விருசொற்களின் பொருள் நுட்பங்களையும் ஆராய்ந்து பார்ப்பவர்க்கு யாம் கூறும் உண்மை விளங்காமற் போகாது. ஒருவர் எதிர்பார்த்தது நிகழக்கண்டால் களிப்பு அதாவது மகிழ்ச்சியும், எதிர்பாராதது நிகழக்கண்டால் ஆச்சரியம் அதாவது வியப்பும் அடைவது மக்களின்வழக்கம்; இயற்கையுங்கூட. எனவேதான், நந்தனர் வெந்து சாம்பலாக வேண்டுமென்று எதிர்பார்த்தபடி நிகழ்ந்ததால், அங்கு களிப்பும், நந்தனரின் புதுமைக் காட்சியைப் பார்க்கவந்த பொதுமக்களுக்குஇவர்கள் எதிர்பார்த்தபடி நந்தனர் காணப்படாமையால், இங்கு இவர்களுக்கு ஆச்சரியமும் ஏற்பட்டதாகும். இதனை மறுப்பவர் எவராயினும், அவர் உண்மையை மறைத்துப் பொய்யை நிலைநாட்ட முயல்பவரேயாவர்.

## அறிவிப்பு

கோவை மாவட்ட கிளைக் கழக செயலாளர்களுக்கு,

ஏற்கெனவே விடுத்த சுற்றறிக்கைபடி கிளைக் கழகச் செயலாளர்கள், பிப்ரவரி 10-தேதிக்குள் தொண்டர் படைக்கு கழகத்தோழர்களை, அவர்கள் சொந்தபொறுப்பு உடையுடன் அத்தாட்சியுடன் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகிறார்கள்.

கிளைக்கழகக் கொடிகள் ஊர் பெயர் பொறிக்கப்பட்ட கழகக் கொடிகளை, பிப்ரவரி 10-தேதிக்குள் மகாநாட்டு அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழக
இரண்டாவது (அரசியல்) மாநாடு
காட்டூர் தெரு. மேட்டுப்பாளையம்,
கோயமுத்தூர்.

# வரலாற்றில் இருவர்

[கே. என். சி.]

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியும், சென்ற நூற்றுண்டின் துவக்கமும் அவன் பெயர் கேட்டு நடுங்கியது. வீரமும் விவேகமும் நிறைந்த பிரஞ்சுப் படைகளின் தளபதி. போர்முரசின் முழக்கத்தை இன்னிசையாக்கிக்கொண்ட இரும்பு நெஞ்சினன். அவன் காலத்தில், பிரஞ்சு நாடு, பெரும் புரட்சிக்குப் பின்னர் கண்ட, மக்களாட்சியில் திளைத்திருந்தது. அமைப்பால் உயர்ந்ததாகத் தோன்றியதேயன்றி, "திரேக்துவார்" (Directoire)என்ற அவ்வாட்சி உண்மையில் ஊழல் நிறைந்த ஒன்றாய் மாறிவிட்டது. சட்டமியற்றும் அதிகாரம் 500 பேர்கள் கொண்ட சபையிடத்திலும், அச்சட்டத்தை விவாதித்து நிறைவேற்றும் அதிகாரம் 250 பேர்கள் கொண்ட மற்றொரு சபையிடத்திலும், அச் சட்டத்தை அமுலாக்கும் நிர்வாக அதிகாரம் 5 "டைரக்டர்" களிடத்திலும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மக்களாட்சியின் அடிப்படையான "அதிகாரப் பிரிவினை" அவ்வாட்சியில் இருந்தபோதிலும், அடிக்கடி இருசபைகளும் டைரக்டர்களும் கருத்து வேற்றுமையின் காரணமாக மோதிக்கொண்டதனல் ஆட்சி அவலநிலை யடைந்துவிட்டது. அதுவுமன்றி, ஆஸ்ட்ரியா, இத்தாலி, எகிப்து ஆகிய நாடுகளுடன் செய்த போர்களின்விளைவாக நாட்டிலே பொருளாதாரக் கஷ்டமேற்பட்டு மக்கள் அவ்வாட்சியின் மேல் வெறுப்படையவும் தொடங்கிவிட்டனர்.

மக்களுக்கு ஆட்சியின்மேல் ஏற்பட்ட வெறுப்பை ஒரு புறமும் தன்மேல் போர்வீரர்களுக்கிருந்து வந்த பற்றுதலை மறுபுறமும் பயன்படுத்திக்கொண்டான். நாம் மேற்குறித்த தளபதி — கவிழ்த்தான் ஆட்சியை, கைப்பற்றினன் அதிகார முழுவதையும், படை பலமும் மக்களின் ஆதரவும் ஒருங்கேபெற்றுவிட்ட அவனுக்கு எதுதான் சாத்யமில்லை? அத்தளபதியே பின்னர் பேரரசனுகமாறி நீளுலகில் தன் பெயரை நிறுத்திச் சென்ற "நெப்போலியன்"

இந்த நூற்றுண்டிலும் அந்த நெப்போலியனை நினைவுறுத்தினன் ஒருவன் — தன் வீரச்செயல்மூலம். இவனும், அவனைப்போல் ஓர் தளபதியே. எகிப்து நாட்டுப் படைத்தலைமை இவனிடமிருந்துவந்தபோது அந்நாட்டு அரசபீடத்தில் பரூக் அமர்ந்திருந்தான். மன்னர்கள் ஒருவர்பின் ஒருவராக மறைந்துகொண்டிருக்கும் இந்நாட்களில், தன் குதூகல வாழ்விற்காக குடிகளின் நல்வாழ்வை நாசப்படுத்திய 17-ம் நூற்றுண்டு 14-வது லூயியின் பிரதிபிம்பமாக காட்சியளித்தான் பரூக்.

மக்களாட்சியின் மணத்தை நுகரும் இன்றைய உலகம் இத்தகைய எத்தனை ஏற்றுக்கொண்டிருக்கும் எகிப்தை எள்ளிநகையாடியது. இன்பத்தின் சிகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மன்னனின் கண்களில் துன்பப்படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் மக்கள் எவ்விதம் தெரிவர்? மக்களை அறவே மறந்தான். விளைவு? மக்களின் எதிர்ப்புணர்ச்சி எரிமலையாக மாறியது. இந்த மாற்றத்தைத்தான் எதிர்பார்த்திருந்தான் நம் தளபதியும். ஆட்சி கவிழ்ந்துவிட்டது அவனியே அதிசயிக்கும் விதமாக. இவ்வீரன் "நகீப்"

சீர்கேடடைந்த அரசாங்கத்தை, சிரமம் அதிகமில்லாது கைப்பற்றி தம் தலைமையில் புதிய ஆட்சி அமைத்துக்கொண்ட இவ்விருவரும் தளபதிகளே. தளபதிகளெனில், தம்கீழ் பணியாற்றும் படையினர் அனைவரும் தாமிடும் கட்டளையைக் கண்மூடித்தனமாக நிறைவேற்றும் அளவிற்கு அவர்தம் அன்பைப் பெற்றவர்கள். நெப்போலியன் ஜனநாயக அமைப்பு கொண்ட—ஆனல் முற்கால முடியாட்சியின் ஊழல் நிறைந்த—ஓர்வித ஆட்சியைச்சாடினன். நகீப்நேரடியாகவேமன்னனைச் சாய்த்தான். இவ்வேறுபாடன்றிஇருவருக்கும் அக்கிரம ஆட்சி ஒழிய வேண்டுமென்ற மக்களின் ஆர்வம் உறுதுணை செய்தது. இவ்வாறுமக்களின்முழுஆதரவும்,படைகளின்பக்கபலமும் சேர்ந்துகிடைத்த காரணத்தினலேயே "இரத்தம் சிந்தா இராணுவப் புரட்சியால் அத்தகைய மாபெரும் செயல் சாத்யமாயிற்று. அப்படியில்லாது பட்டாளத்தின் துணையைமட்டும்கொண்டு செய்திருந்தால், மக்களின் வெறுப்பு மலைபோல் வளர்ந்து புதிய ஆட்சியும் வெகு விரைவில் புதைபட்டுப் போயிருக்கும். இதற்கெடுத்துக்காட்டாக சமீபத்தில் நிகழ்ந்த சம்பவமொன்றைக் குறிப்பிடலாம். இரண்டாவது உலகப் போரின்முடிவில் ஒடுக்கப்பட்ட ஜப்பானிடம் யுத்தக் கடன் வசூல் செய்யும் பொறுப்பு அமெரிக்கத் தளபதி மக்ஆர்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடன் வசூல் செய்வதை நேர்முகக் கடமையாகவும், மீண்டும் அந்நாடு தலை தூக்குவதைத் தடுப்பதை மறைமுகக் கடமையாகவும்கொண்டு பணியாற்றிய மக்ஆர்தர், தனக்கேற்பட்ட புது செல்வாக்கையும் வலிவையும் ஆதரவாகக்கொண்டு ஆசியாவின் தென்கிழக்கை ஆட்டிப்படைத்து அங்கு ஏகபோகத்தில் திளைக்கலாம் எனத் திட்டமிட்டான். அதன் விளைவாகவே, அமெரிக்க நாட்டுப் பெருந்தலைவர், அகில உலகின் தலைவிதியை நொடிப்பொழுதில் மாற்றிவிடும் சக்திபெற்றிருந்த ட்ரூமன், தன் அதிகாரத்திற்குட்பட்ட, தன்உத்திரவுபெற்று ஓடிவரவேண்டிய ஒரு சாதாரண தளகர்த்தர் மக்ஆர்தருடன் உரையாட "வேக்" தீவிற்குப் பறந்துவர நேரிட்டது. அன்று எல்லோரது கவனத்தையும் ஈர்த்த ஆர்தர் இன்று இருக்குமிடம் தெரியாது போய்விட்டான். காரணம், வெறும் இராணுவ பலத்தில்மட்டுமே அவன் நம்பிக்கை வைத்ததுதான்.

அப்படியுமில்லாது, படைபலமின்றி, மக்கள் சக்தி மட்டுமே திரண்டெழுந்து ஆள்வோரை வீழ்த்தி அதிகாரத்தைப் பெற்றுவிட முனைந்திருந்தாலும் — ஆகாத செயல் என்று கூறிவிடுதல் அறியாமையாகும்—பெரும் கிளர்ச்சிக்குப் பின்னர், பிணமலைகள் குவிந்த பின்னர், "தேசிய பாஷை"யில் கூறினல் "தியாகாக்கினி"யில் பலர் மூழ்கிய பின்னரே காரியம் கைகூடியிருக்க முடியும். அமெரிக்காவில், பிரான்ஸில், ரஷ்யாவில் முறையே 1783, 1789, 1917-ல் நிகழ்ந்த மாபெரும் மக்கட் போராட்டங்கள் இதற்கு நிரந்தர சான்று பகரும் நிலைபெற்ற விட்டன.

ஐரோப்பா கண்டத்திலே பிரான்ஸ்—அங்கு நெப்போலியன், நூற்றம்பது ஆண்டுகட்கு முன்பு. எகிப்து ஆப்ரிக்கா கண்டத்திலே—இங்கு நகீப், இன்றும். இடமும் காலமும் இவ்விருவருக்கிடையே நெடுந்தூரத்தை உண்டாக்கியிருக்கின்றன. ஆனல், இவர்களது பணி—அதைச்செய்ய இவர்கள்கையாண்ட முறை — இவைகள் இருவரையும் இணைத்துக் காட்டுகின்றன. இங்கு, பிரான்ஸிற்கும் எகிப்திற்கும் உள்ள சரித்திரத் தொடர்பு குறிப்பிட வேண்டியதொன்றாய் இருக்கிறது.

நெப்போலியன் படைத்தலைவனயிருந்தபோது, எகிப்தில் பரவியிருந்த துருக்கிய சாம்ராஜ்யத்தைப் பிடித்து, அங்கிருந்து இந்தியாவிற்கு வந்து இங்குள்ள ஆங்கிலேயர்களுடன் போர் செய்யும் திட்டமுடன் எகிப்திற்கு 1798-ல் வந்தான். "வீரர்களே! பிரமிட் (Pyramids) கோபுரஉச்சியிலிருந்து 40நூற்றுண்டுகள் உங்களதுபோர்த்திறனைக்கண்டு வியக்கின்றன." என்ற சாதுரிய வாக்கைப் பயன் படுத்தி பிரஞ்சுப் படைகளின் உணர்ச்சியைத் தூண்டி, சரித்திரப் பிரசித்தி பெற்ற போர் செய்ததும் அப்போதுதான். ஆனல், போரின் முடிவு தெரிவதற்கு முன்பே, பிரான்ஸில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி அவனை அங்கு வெகு விரைவில் கொண்டுபோய் சேர்த்தது. அதே அரசியல் நெருக்கடிதான் அவன் அதிகார பீடமேறுவதற்கும் வழி செய்தது.

எகிப்து நாட்டிலிருந்து சென்ற நெப்போலியன் பிரான்ஸில் எதைச் செய்தானே, அதையே நகீப் எகிப்தில் செய்து காட்டினன். இத்தொடர்பு விநோதமானது என்று கூறிவிட்டுவிடுவதற்குமில்லை. உலக அரசியல் வல்லுநர்களின் சிந்தனையைக் கிளறிவிடும் தொடர்பாகவும் இருக்கிறது.

வரலாற்றுத் தொடர்பு கொண்ட இரு நாடுகள். அங்கு ஒரே முறையைப் பின்பற்றி ஆட்சிக்குப் புது வடிவம் தந்த இருவர். நெப்போலியனும் நகீபும்—ஒருவர், சென்ற வரலாற்றில் இருப்பவர்; மற்றொருவர்,வருங்கால வரலாற்றிற்குரியவர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, மூடநம்பிக்கையும், எஜமானன்—ஏழை விசுவாசமும் நீடிக்கச்செய்யும் வழிவகைகளைக் காண முயல்கிறார்கள்.

புதுமை அரும்பு மலர்கிறது! பழமை இருள் அகல்கிறது!!

ஆனால், அதே நேரத்தில், புதுமையோடு போட்டி போட, ஆதிக்க வரிசைகள் புதுப் பாதை காண முயல்கின்றன!

இந்த நேரத்தில்தான் நாம் உலவி வருகிறோம். புதுப்புது ஆதிக்கங்கள் நாட்டில் கொடுங்கோலோட்சி வருகின்றன! அவைகளை எதிர்த்துப் போராடும் நமக்கும் புத்தம் புது வழிகள் கிடைத்துள்ளன!! இந்தப் புதுவழிகள்மூலமே, நம்முடைய அறிவுப் பணியை வளர்க்கச் செய்ய ஏதுவாகிறது. பணபலமிக்க ஆதிக்கச் சக்திகளை நம்மால் எதிர்த்து நிற்கச் செய்யும் அந்த வழிகளில் குறிப்பிடத்தக்கவை — மேடைப் பிரச்சாரம், நாடகப் பிரச்சாரம் ஆகியவைகளாகும். இவ்விரு துறைகளும் நம்முடையபீரங்கிகள். எனவேதான், ஆதிக்கபுரியினர், இன்று இவைகளை இழித்தும்பழித்தும் பேசுகின்றனர். நாம் பிறந்த நாள்முதல், 'பாராட்டியறியாபண்பு' கொண்ட, இவர்களின் ஏச்சும் பேச்சும், நமது பணியின் வெற்றியை அளவிட்டுக் காட்டுவதாகும்.

சமுதாயப் புதுஅமைப்புப்பணியிலீடுபட்டுவரும் நாம், அடிக்கடி பல்லாயிரக் கணக்கான மக்களைக் கூட்டி, புதுமை எண்ணங்களைப் பூக்கச்செய்வது, அவைகளைநாட்டோர் அறிந்து மணம் பெறும் வகையில் செய்யும் பலமுறைகளையும்கொண்டு வருகிறோம். தி. மு. க. பிறந்த ஆண்டில், இந்தமுறைகளில்ஒன்றாக, ஒவ்வோர் மாவட்டத்திலும் மாநாடுகள் கூட்டினோம் — பிறகு மாநில மாநாடும் கூட்டி கழகத்தை சட்டரீதியான அமைப்புள்ளதாக்கியிருக்கிறோம். தி. மு. க. மாநாடுகள் கூட்டியதுபோலவே, சமூக சீர்திருத்தம், வகுப்புரிமை போன்ற பல பொதுமாநாடுகளும் நடத்தி, பற்பல பிரச்னைகள் குறித்தும், மக்களிடையில் விழிப்புணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறோம்.

இந்த அரும் பணியின் இரண்டாவது கட்டம், ஆரம்பமாகிறது, இப்போது. வரும் 14, 15 தேதிகளில் கோவை மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையத்தில் பாண்டியன் பந்தலில், கனகராசன் அரங்கில், 2-வது சமூக சீர்திருத்த மாநாடும் - 2-வது மாவட்ட தி. மு. க. மாநாடும் நடைபெற விருக்கிறது. சட்டரீதியில் அமைந்துள்ள கழகங்களின் சார்பில் 2-வது மாநாட்டினை முதல் முதலாகக் கூட்டும் வாய்ப்பு கோவைக்குக் கிடைத்திருக்கிறது! மாநாட்டின் வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் ஈ. வி. கே. சம்பத்—அவர்தான் கோவைமாவட்டச் செயலாளர். அவரது பார்வையில் செயலாளர்களாக தோழர்கள் வி. சண்முகநாதன், எஸ். எ. இராஜமாணிக்கம் பொருளாளராக தோழர் கே. எஸ். வாசன் ஆகியோரிருந்து பணிபுரிகின்றனர். சீர்திருத்த மாநாட்டை தோழர் சி. பி. சிற்றரசு துவக்கி வைக்க, தோழர் மு. கருணாநிதி தலைமையிலும்; தி. மு. க. மாவட்ட மாநாட்டை நாஞ்சில் தோழர் கி. மனோகரன் துவக்கித்தர தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையிலும் நடத்துவதென முடிவு செய்திருக்கிறார்கள். மாநாட்டில்பொதுச் செயலாளரும் முன்னணிவீரர்களும் பங்கேற்பர். இரண்டு நாட்களிலும் இரவில் 'காதல் ஜோதி'—'சந்திரோதயம்' ஆகிய பிரச்சார நாடகங்கள் நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி அவர்தம் குழுவினரின் ஒத்துழைப்போடும் நடைபெறும். சீரும் சிறப்புடன் மேட்டுப்பாளையத்தில் நடைபெறும் இந்த மாநாடுகளில், எல்லோரும் பங்கு பெற வேண்டும்! வளர்ந்து வரும் முற்போக்குக் கொள்கைகளுக்காக வாழ்வைத் தத்தம் செய்திருக்கும் வாலிபத் தோழர்களே! புறப்படத் தயாராகுங்கள் — இது இரண்டாவது அணி வகுப்பு! இந்த அணி வகுப்பிலே சேர்ந்து, நம்முடைய ஆக்கவேலைகளுக்கான திட்டங்களைத் தீட்டிக் கொள்ள, திண்தோள் வீரர்களே, திரண்டு செல்ல வாருங்கள்! வாட்டிடும் ஆதிக்கங்களை வீழ்த்த புது அணி தயாரிப்போம்! புத்தொளி பரவுகிறது — இருள் அகலுகிறது. எனினும், எத்தர்களின் பித்து மனப்பான்மை போகவில்லை. அதனை அழித்து ஒழித்தாலன்றி திராவிடத்துக்கு வாழ்வில்லை! அத்தகைய மனோ உறுதியும், ஆவேசமும் கொண்ட அருந்தமிழ் வீரர்காள்! அன்புத் தோழர்காள்!! கோவை மாவட்டம் அழைக்கிறது—புறப்படத் தயாராகுங்கள், மேட்டுப்பாளையத்துக்கு.

★

## சேலம் - கோவையில்
# புயல் நிவாரண நிதி நாடகங்கள்

1—2—53-ல் சேலத்தில் தோழர் மு. கருணாநிதி, சிவாஜி கணேசன் அரங்கண்ணல் முதலிய தோழர்கள் நடிக்கும் 'பரப்பிரம்மம்' நாடகம் இரண்டு காட்சிகள் நடைபெற்றன. முதல் காட்சிக்கு தோழர் சுப்ரமணியம் எம். எல். ஏ. அவர்கள் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றினார். இரண்டாம் காட்சிக்கு தலைமை வகித்த நடிப்புச்செல்வர் எம். ஜி. ராமசந்தர் அவர்கள் நாடகக் கலை சினிமாக் கலைகளின் வளர்ச்சிப் பற்றியும் 'பரப்பிரம்மம்' நாடகத்தில் விளக்கப்படும் கருத்துக்கள் பற்றியும் நீண்ட சொற்பொழிவாற்றினார். தி. மு. க. செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் நன்றி கூறலுடன் நடிகத் தோழர்கள் அனைவருக்கும் மாலை அணிவித்துப் பாராட்டுத் தெரிவித்தார். புயல் நிதிக்குத் தரப்பட்ட நன்கொடைத் தொகையைப் பெற்றுக்கொண்டு மு. கருணாநிதி நன்றி கூறினார். சிவாஜி கணேசன் சிறிது நேரம் பேசினார்.

இரண்டு நாடகங்களையும் ஏராளமான மக்கள் கண்டு களித்தனர். பலர் டிக்கெட் இன்றி வீடு திரும்பினர்.

2—2—53-ல் கோவையில் தோழர்கருணாநிதி, சிவாஜிகணேசன் அரங்கண்ணல், எம். என். கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, புகழேந்தி, மணி, கருணாகரன், செல்லமுத்து, ராமதாஸ், முத்துகூத்தன், டி. என். கிருஷ்ணன், பொன்னுசாமி, நம்பிராஜன், ராஜா, தெட்சணாமூர்த்தி, லட்சுமணன் ஆகியோர் நடிக்கும் 'பரப்பிரம்மம்' நாடகம் சிறப்புடன் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தோழர் ஈ. வி. கே. சம்பத் நாடகத்தையும்நடிகர்களையும்பாராட்டிப் பேசிப்புயல் நிவாரணநிதித்தொகையைத் தோழர் மு. கருணாநிதியிடம் அளித்தார். ஆனைமலை தி. மு. க. சார்பில் 151 ரூபாய் புயல் நிதிக்கு தரப்பட்டது. தோழர் அன்புச்செழியன் மூலம் புயல் நிதிக்காக நைந் தறித்துணிகள் (பதினைந்து ரூபாய் பெறுமான முள்ளவை) கருணாநிதியிடம் தரப்பட்டது. சிவாஜி கணேசன் சிறிது நேரம் பேசினார். தோழர் கருணாநிதி பெற்றுக் கொண்டு நன்றி தெரித்தார். நாடகத்திற்கு இடமின்றி ஏராளமானவர் வீடு திரும்பும் நிலைமை ஏற்பட்டது.

| | |
|---|---|
| சேலத்தில் வசூலான நாலாயிரத்தில் நாடக செலவு போக தரப்பட்டது | 3000—0—0 |
| கோவையில் வசூலான நாலாயிரத்து நூறு ரூபாயில் நாடகசெலவு போக தரப்பட்டது | 3055—0—0 |
| | 6055—0—0 |
| ஆனைமலை தோழர்கள் நாடக மேடையில் தந்த நன்கொடை | 151—0—0 |
| | 6206—0—0 |
| நாடகக்குழுவினர்-பின்னனி இசை—ஒளி அமைப்பினர்—திரை அமைப்பாளர்—மேக்கப்—முதலியவைகளுடன் போக்கு வரத்து உட்பட செலவு | 1450—0—0 |
| ஆகமொத்தம் மீதி | 4756—0—0 |

ரூபாய் **4756**-ம் புயல் நிவாரண நிதியில் சேர்க்கப்பட்டது

மு. கருணாநிதி,
நிதிக் குழுச் செயலாளர்.

# நாடகப் பேராசிரியருக்குப் பாராட்டு

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனாரைப் பாராட்டி, கடந்த முதல்நாளன்று, சென்னை திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில், சிறந்ததோர் விழா கொண்டாடப்பட்டது. நாடகக் கழகச் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் கட்சி மாச்சரியம் கருதாது பலரும் கலந்துகொண்டனர்.

காலையில், நாடகப் பேராசிரியர், மவுண்ட் ரோடு சுகுணவிலாச சபையிலிருந்து கலைஞர்கள் புடை சூழ ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். பேராசிரியருக்கு, முதலமைச்சர் ஆச்சாரியார் பொன்னாடை போர்த்தினார். டாக்டர் சி. பி. ராமசாமி தலைமை வகித்தார். திரு. வி. க. நூல் நிலையமொன்றைத் திறந்துவைத்தார். தோழர்கள் ம. பொ. சிவஞானம், செட்டிநாட்டு முத்தையா, டி. கே. சண்முகம், ப. ஜீவானந்தம், வி. வி. சீனிவாசய்யங்கார், நவாப் ராஜமாணிக்கம், எம். ஆர். ராதா, பக்தவத்சலம், மேயர் செங்கல்வராயன், கொத்தமங்கலம் சுப்பு, கே. எஸ். ராமசாமி, வி. சி. கோபாலரத்னம், நடிகர் பாலசந்தர், சின்ன அண்ணாமலை, கண்ணதாசன், அன்பழகன், கம்பதாசன் முதலியோர் நாடகப் பேராசிரியரைப் பாராட்டிப் பேசினர். திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றினார்.

பிறகு, நாடகப் பேராசிரியர் எழுதிய பல நாடகங்களில் சில காட்சிகளை பல நடிகமணிகள் நடித்துக் காட்டினர். தோழர்கள் நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன், எம். ஆர். ராதா, டி. எஸ். பாலையா, சம்பங்கி, டி. ஆர். ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

விழாவுக்கு வந்து சிறப்பித்த அனைவருக்கும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

காலையில் குளிக்கரை பிச்சையப்பாவின் நாதஸ்வர இன்னிசையும் நடைபெற்றது.

★

# சச்சிவோத்தமர்!

தமிழ்ச்சீயங்கள் உலவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகச் சச்சிவோத்தம சர். சி. பி. ராமசாமி அய்யர் பதவி பேற்றுக்கொண்டிருக்கிறார். அவரது 'வருகை,' நாட்டோர் பலருக்கு ஐயத்தையும் அச்சத்தையும் உண்டாக்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; ஆனால் மாணவமணிகளும் அஞ்சுகிறார்கள்— ஐயப்கொண்டு கிடக்கிறார்கள். எதிர்கால 'உலகை' உருவாக்கும் ஓர் பல்கலைக் கழகத்துக்கு, உலகியலறிவும் வாழ்வியலறிவும் உணர்ந்த பெரியவர்கள், துணைவேந்தர்களாக அமைவது, மிக மிக வரவேற்கக் கூடியதுதான். உலக அரங்கில் தாம் கற்ற பாடங்களை வடித்தும், வகுத்தும், மாணவர்களைத் தயார் செய்ய அத்தகையவர்கள் துணைவேந்தர்களாக நியமனம் செய்யப் பெறுவதும், அவர்களும் தமக்குக் கிடைத்த நற்பணி இதுவெனக் கருதி, பொறுப்பேற்பதும் நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை வைப்போருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய காரியங்களாகும்.

இப்போது, சச்சிவோத்தமர், நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்! அவரும் பொறுப்பேற்றிருக்கிறார்!!

அவரது நியமனம் கண்டு, அறிவுலகம் திகைக்கிறது. மாணவர் குழாம் — மருள்கிறது; சந்தேகக் கண்களோடு, பல்கலைக் கழகக் கட்டிடங்களைப் பார்க்கிறது. காரணம், தமிழ்மணம் கமழும் ஓர் பூங்காவில், 'சமஸ்கிருதம்' போற்றும் ஒருவர் தலைவராக அமர்த்தப்பட்டுள்ளார் என்பதுமட்டுமல்ல, எங்கேயோ அலைந்துகொண்டிருந்தவரை, இழுத்துவந்து, அரியாசனத்தில் அமர்த்தவேண்டிய அவசியம்யாது? எனும் ஐயம், தமிழர் தம் உள்ளங்களைக் குடையாமற் போகாது.

சச்சிவோத்தம சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்களை, அறிவோம், நாம்! அவர், திவானாக இருந்து திருவாங்கூரைப் படுத்திய பாட்டை, இந்த உபகண்ட முழுமையுமுள்ளோர் அறிவர்! அத்தகையவர், இன்று அமர்த்தப்பட்டிருக்கிறார், 'அண்ணாமலை'க்குத் தலைவராக.

"அவர் அமர்த்தப்பட்டதற்குக் காரணம் நானே!" என்று முதலமைச்சர் ஆச்சாரியார், சென்னையில் தெரிவித்துள்ளார்—நாடகப் பேராசிரியரின் பாராட்டுக் கூட்டத்தில். தமிழர் உள்ளம் திகைப்பதற்கு, வேறென்ன சான்று வேண்டும்?

அகில உலகும் போவதும் வருவதுமான சிறப்புப் பெற்றவர், சி. பி; மறுப்பாரில்லை. வேதாந்த வியாக்யானங்களில், சிறந்தவர்; மறுப்பாரில்லை. அதிகாரமூலம் காரியங்களைச் சாதிக்கக்கூடியவர்; மறுப்பாரிலலை. ஆனால், இந்த குணாதிசயங்களல்லவே, துணைவேந்தருக்குத் தேவையானவை! சனாதனமும், பழைமையும், ஆதிக்கமணிமுடியும், இந்தக் குணாதிசயங்களைக் கண்டு கொஞ்சலாம்! மகிழலாம்!! கூத்தாடலாம்!!! ஆனால், ஓர் பல்கலைக் கழகத்துக்கு......?

இந்த ஐயத்தால்தான், தமிழுலகம் திகைக்கிறது — மாணவர் குழாம் அவர் பதவியேற்ற நாளில் நடைபெற்ற விருந்தில் பங்கேற்கவில்லை.

இதன் பலாபலன்களை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் அக்கரை கொண்டோர், எண்ணிப்பார்த்திருக்கவேண்டும். ஆனால் ஆச்சாரியாரின் பிடி, அவர்களையும் வளைத்திருக்கிறதே!

★

## முழக்கம்

திருநெல்வேலி டவுன் 1—1—53 அன்று மாலை மு. பரிதிமால் தலைமையில் ச. வீரபாகு, பி. காசிவிசுவலிங்கம் ஆகியோர் பேசினர்.

கோவிலடி (தஞ்சை) 14—1—53 அன்று 17-இரட்டைமாட்டு வண்டியுடன் பூட்டப்பட்ட உழவர் ஊர்வலம் நடைபெற்றது. அன்று மாலை ராமகிருஷ்ணன் தலைமையில் திராவிடர் திருநாள் கூட்டம் நடைபெற்றது.

காவேரிப்பாக்கம் 19—1—53 அன்று தி. மு. க. மூன்றுவது ஆண்டுவிழாக் கூட்டம் எ. எல். கி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. என். எ. ரசித் பேசினர்.

ஆலந்தூர் 24—1—53 அன்று மாலை தி. மு. க. முதலாம் ஆண்டு விழாக் கூட்டம் ம. கன்னியப்பன் தலைமையில் நடைபெற்றது. அண்ணு, தில்லை-வில்லாளன், கே. மதியழகன், ஆகியோர் பேசினர்.

ஆற்காடு குப்பம் 26—1—53 அன்று மாலை பொங்கல் விழாப் பொதுக் கூட்டம் தோழர் கே. விநாயகம் எம். எல். எ. தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். இளங்கோ, எ. எல். கி. கிருஷ்ணசாமி, இ. எஸ். தியாகராசன், மு. நன்மாறன், ச. மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

அனகாபுத்தூர் 29—1—53-ல் அன்று மாலை டி. என். சம்பந்தம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ, என். வி. கலைமணி ஆகியோர் பேசினர்.

பாளையங்கோட்டை 29—1—53 சேவியர் கல்லூரி தமிழ்ப் பேரவையில் "வடநாடு தொடர்பற்ற திராவிடநாடு பிரிதல் வேண்டும்" என்ற சொற்போர் நடைபெற்றது. ஆதரித்து, தோழர்கள் நாகராசன், அமீது, செலலப்பாண்டியன், சுப்பையா, சிவசுப்பிரமணியன், ராமசாமியும் எதிர்த்து சிவதாணு, முத்தையா, சிவசுப்பிரமணியன் ஆகியோர் பேசினர். இறுதி ஓட்டெடுப்பில் ஆதரவாக 116-ஓட்டுகளும், எதிர்த்து 56 ஓட்டுகளும் கிடைத்ததினல் 'வடநாடு தொடர்பற்ற திராவிடநாடு பிரியவேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேறியது. இதற்கு முன் 13—1—53-ல் ஆங்கிலப் பேரவையில் நடைபெற்ற சொற்போரிலும் ஆதரித்து 78-ஓட்டுகளும் எதிர்த்து 46-ஓட்டுகளும் கிடைத்தன.

நடுக்காவேரி 30—1—53-அன்று தி. மு. க. துவக்க விழா பொ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. சி. பி. சிற்றரசு பேசினர்.

இடையங்குளம் 30—1—53 அன்று தி. மு. க. பொதுக்கூட்டம் புதுவைச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. விருதை ந. இராமசாமி, அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, பாண்டியன் ஆகியோர் பேசினர்.

ஆறுமுகநேரி 1—2—53 அன்று மாலை ச. கெ. ஆதித்தன் தலைமையில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது. தூத்துக்குடி கே. வி. கே. சாமி, எஸ். நடராசன் ஆகியோர் பேசியிர்.

---

ஆசிரியருக்கு கடிதம்......

### திருவள்ளுவர் திருநாள்

"தமிழ்மறை எனவும் பொதுமறை எனவும் போற்றப்படும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் யாவருடைய பாராட்டுக்கும் உரியவர். அவருடைய திருநாள் தமிழரின் தனிப்பெருந் திருநாள். தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஒப்பற்ற திருநாள். அன்பும் அருளும் அறமும் ஆட்சி செய்யுந் திருநாள். ஆதலினல், சாதி மத பேதமின்றியும், அரசியற்கட்சி வேறுபாடின்றியுந் தமிழ் மக்கள் யாவரும் ஒவ்வொரு வீட்டிலுந் திருவள்ளுவருடைய திருநாளைக்கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாண்டில், திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் 15-ம் நாளாகிய (28—5—53) வியாழக் கிழமையாகும்.

இந்த நாளைத் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடச் செய்வதற்கும், ஆண்டு தோறும் வரும் திருவள்ளுவர் திருநாளை அரசினர் விடுமுறை நாளாக்குவதற்கும் எங்கள் தமிழ்மறைக் கழகம் முயல்கிறது. இம்முயற்சி நன்கு நிறைவேறுதற்கு இன்றியமையாதனவற்றைச் செய்யுமாறு தமிழர்கள் வாழும் இடங்களிலுள்ள தமிழர்களின் சங்கங்களையும், கலாசாலைகளையும், மடங்களையும், பத்திரிகைகளையும், தமிழறிஞர்களையும் கேட்டுக்கொள்கிறோம். இதுபற்றியவேறு செய்திகளை அறியவும், அறிவிக்கவும் விரும்புவோர் தமிழ் மறைக் கழகம், இல, 44, 33-ம் ஒழுங்கை, கொழும்பு 6 எனும் முகவரிக்கெழுதுக." பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ. பி. ஓ. எல். (தமிழ் மறைக் கழகத் தலைவர்.)

---

### ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சொற்பொழிவு நிகழ்ச்சி

பிப்ரவரி

7 விருதுநகர் அழகிரி படிப்பகம்
8 விருதுநகர் புயல் நிவாரணநிதி நிகழ்ச்சி
9 போடி
10 தேவாரம் நாடகம்
11 மதுரை திருமணம்
14 மேட்டுப்பாளையம்
15 மாநாடு (கோவை)
17 காங்கயம்
21 திருநெல்வேலி
22 பாளையங்கோட்டை
23 சாத்தான் குளம்
28 சங்கரன்கோவில்

---


# மேட்டுப்பாளையம் நோக்கி வாரீர்!

## கோவை மாவட்ட

| இரண்டாவது | இரண்டாவது |
|---|---|
| **சமூக சீர்திருத்த மாநாடு** | **மாவட்ட தி. மு. க. மாநாடு** |
| தலைவர்: மு. கருணாநிதி | தலைவர்: இரா. நெடுஞ்செழியன் |
| திறப்பாளர்: சி. பி. சிற்றரசு | திறப்பாளர்: கி. மனோகரன் |
| கலைக்கண்காட்சித் திறப்பாளர்: அருண்மொழி | |
| 14-2-53 சனிக்கிழமை | 15-2-53 ஞாயிற்றுக்கிழமை |

தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்துகொள்வார்.

கோவை மாவட்டம் - மேட்டுப்பாளையத்தில்
பாண்டியன் பந்தலில், கனகராசன் அரங்கில் மாநாடுகள் நடைபெறும்.

கே. எ. மதியழகன், க. அன்பழகன், இரா. இளம்வழுதி, என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ, சத்தியவாணிமுத்து, கண்ணதாசன், கோபி-ராசு, தாமரைச்செல்வன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இசை:- நாகூர் அனீபா, சேலம் சீனிவாசன், கோவை முத்துசாமி.

★

—இரு நாடக விருந்துகள்—

சி. என். ஏ., நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, மு. கருணாநிதி முதலியோர் பங்கேற்கும்

| சனி இரவு | ஞாயிறு இரவு |
|---|---|
| **காதல் ஜோதி** | **சந்திரோதயம்** |
| [சி. என். ஏ. தீட்டியது] | [சி. என். ஏ. தீட்டியது] |

கட்டணம்:— வ. குழு ரூ. 5, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணு 8.

| | | |
|---|---|---|
| ஈ. வி. கே. சம்பத், வ. கு. தலைவர். | கே. எஸ். வரதன், பொருளாளர். | வி. சண்முகநாதன், எஸ். எ. இராஜமாணிக்கம். செயலாளர்கள். |


Edited Printed & Published by C. N. Annadurai M. A., "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.